# ★ யாழ். குடாவில் பாரிய இராணுவ நடவடிக்கை?

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ள படையினர் தயாராகி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். குடாநாட்டை மீட்டெடுக்கவேண்டுமானுல் புலி

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 23 இதழ் 178
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 07 — 08 — 1992

## யுத்தகாலத்திற்கு சிவில் நிர்வாகம்?

(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் யுத்தகால சிவில் நிர்வாக அமைப்பொன்றை மேற்கொள்ளும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுவருவதாக கொழும்பு பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு - தொண்டா இரகசிய பேச்சு

(கொழும்பு)

அரசுக்கும் அமைச்சர் தொண்டமானுக்குமிடையில் மூன்று கட்ட இரகசிய பேச்சுக்கள் நடைபெற்றுள்ளதாக மக்கள் ஐக்கியமுன்னித் தலைவர் தினேஷ் குணவர்த்தன

(4-ம் பக்கம் பார்க்க)

## ● பலாலி ஷெல்லுக்கு

# மாணவி உடல் சிதறிப் பலி

# பத்து மாணவர்கள் படுகாயம்

## - ஏழாலையில் சம்பவம் -

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் ஒன்று நேற்று ஏழாலையில் பாடசாலைக்கு அருகில் வீழ்ந்து வெடித்தமையால் பத்து வயது பாடசாலை மாணவி ஒருவர் ஸ்தலத்திலே துடிதுடித்து பலியானுர். பத்து மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று முற்பகல் 11-00 மணியளவில் பலாலி இராணுவ முகாமிலிருந்து ஏழாலை மேற்கு குடியிருப்புப் பகுதியிலுள்ள பாடசாலைக்கு அருகில் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது

ஏழாலை மேற்கு சன்மார்க்க சைவ வித்தியாசாலைக்கருகில் வீழ்ந்த இச் ஷெல்லினுல் 5-ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் தோற்றுவதற்காக விசேட வகுப்புகளுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய மாணவ, மாணவிகள் படுகாயமடைந்தனர். இவர்களில் செல்வி சர்விழி தம்பிராசா (10-வயது, ஏழாலை மேற்கு) ஷெல் தாக்கியதில் ஸ்தலத்திலே உடல் சிதறித் துடிதுடித்து மரணமானுர்.

காயமடைந்தவர்களில் ஒரு வயோதிப மாது உட்பட எண்மர் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட

[4ம் பக்கம் பார்க்க]

## விமான ரோந்து

### குடாநாட்டில் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் கடந்த சில தினங்களாக விமானங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

வவுனியா- பலாலிப் பகுதிக்கு தினமும் காலை-மாலை- இரவு வேளையில் பாரிய விமானங்கள் அடிக்கடி வந்து போவது காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை கடந்த சில தினங்களாக ஹெலிகொப்டர்களும் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத் தக்கது. (சி)

## அராலி குடியிருப்பு நோக்கி அகோர ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அராலி த்துறைப்பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்று நண்பகல் அராலி குடியிருப்புகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

நண்பகல் 12 மணியளவில் பத்திற்கும் மேற்பட்ட ஷெல்கள் இப்பகுதியில் அடுத்தடுத்து வந்து வீழ்ந்து வெடித்தன

இத்தாக்குதலினுல் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படாத போதும் மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன.

கடந்த பல வாரங்களுக்கு பின் நேற்று இச் ஷெல் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. [சி-56]

## அகதிகள் முறைப்பாடுகள் பரிசீலனை செய்யப்படுமாம்

(சென்னை)

இந்தியாவிலிருந்து தாயகம் திரும்ப விரும்பாத அகதிகள் மற்றும் தாமதமாகி தாயகம் திரும்ப வரும்பும் அகதிகளின் முறைப்பாடுகளை இந்திய அரசு பரிசீலனை செய்யவுள்ளாக தெரிவிககப்படுகிறது.

இந்த அகதிகளின முறைப்பாடுகள் கிடைத்தபின் உடன் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதெனவும் இந்திய அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ரி)

## தெரிவுக்குழு மீண்டும் செவ்வாய் கூடும்

[கொழும்பு]

நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 11-ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அதிகாரப் பரவலாக்கம், மற்றும் சில முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படுமென தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை தெரிவுக்குழுவின் கூட்டம் தொடர்ந்தும் இவ்வருட இறுதிவரை இடம் பெறுமெனவும் தெரியவருகிறது. (சி)

### போர் உத்திகளை மாற்றியமைக்க

## இராணுவ'தரப்பினர் முயற்சி

[கொழும்பு]

புலிகளை எதிர்கொள்ளும் நோக்கில் புதிய போர் உத்திகளை இராணுவம் மாற்றியமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் பெருமளவில் பாதிக்கப்பட்டுவரும் இராணுவம் மீண்டும் யுத்தத்திற்கு தன்னை தயார்படுத்திவருவதாகவும் கூறப்படுகிறது.

வடக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளை

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசு-புலிகள் பேச்சுக்களை தெரிவுக்குழு தீர்மானிக்கும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவே முடிவுசெய்யவேண்டுமென அமைச்சரவைப் பேச்சாளர் திரு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கும் - அரசுக்குமிடையில் இரகசியப் பேச்சுவார்த்தை நடைபெற்றுவருவதாக சில செய்திகள் தெரிவிப்பதாக நிருபர் ஒருவர் கேட்டபோதே அமைச்சர் ரணில் இவ்வாறு கூறினுர்.

இதற்கென நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவே பேச்சுவார்த்தையா இல்லையா என்பதை தீர்மானிக்கவேண்டும் என்றுர். [சி]

## போர் நடக்கும் பகுதிக்கே அகதிகள் அனுப்பப்படுகிறுர்கள்

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கை அரசு யுத்தம் நடைபெறும் இடங்களுக்கு அனுப்பத் தொடங்கியிள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்

(4ம் பக்கம் பார்க்க)

| வரம் கொடுக்கும் வனம் அதை வளர்த்து வா தினம் |
|---|

ஒலிம்பிக் தோல்வி:

## இந்திய அமைச்சரை பதவி விலகக் கோரிக்கை

(புதுடில்லி)

பார்ஸிலோனு ஒலிம்பிக்கில் இந்தியா பதக்கம் எதனையும் பெருததற்குப் தார்மீக பொறுப்பேற்று விளையாட்டுத் துறை அமைச்சர் செல்வி மும்தாபெனர்ஜி ராஜினுமா

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### நூல் கண்காட்சியும் விற்பனையும்

ஈழத்து நூல் கண்காட்சியும் விற்பனையும எம்மால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சகலவித மான இந்திய, இலங்கை தமிழ், ஆங்கில, சமய, விஞ்ஞான கலை, இலக்கிய, சோதிட நூல்களை தெரிவு செய்யுங்கள். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக பருத்தித்துறைவீதி, நல்லூர். (எ2335)

### வகுப்புகள்

(புதிய ஆண்டு 5)

எமது நிறுவனத்தில் புதிய ஆண்டு 5 வகுப்புகள் (தற்போது ஆண்டு 4ல் உள்ளவர்கள்) 08-08-92 சனிக்கிழமை பி. ப. 2-00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. மாணவரின் தகுதிக்கேற்ப தரம் பிரித்து வகுப்புகள் நடைபெறும். மாணவரின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும். அனுமதியை 08-08-92 ற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [சி-6623]

### நொத்தாரிஸ்களுக்கு

முதல்தர லெஜரிலான ஈடுவகை Blank உறுதிகள் - மாணவர்க்கான அறிவுக்களஞ்சியம் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றன. சுழிவுண்டு துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம். (எ-2341)

### வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் மணிக்கூடுகளுக்கான பற்றரிகள் யாவும் பெற்றுக்கொள்ளலாம். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன வாங்குவதற்கு எம்மை நாடுங்கள். டில்கா வார்ச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். (சி-6637)

### ஆங்கிலக்கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் தனிப்பட்டவர்களுக்கான ஆங்கில வகுப்பு 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்றது. வீடுகளிலும் வந்து கற்பிக்கப்படும். (சி-6625)

### புத்தக கண்காட்சியில்

ஐந்து ''மீரா பிரசுரங்களை'' வாங்குபவர்களுக்கு 50/-ரூபா பெறுமதியான ''புதிய மீரா நாவல்'' அன்பளிப்பாக வழங்கப்படுகிறது. ஸ்ரீகாந்த்புத்தகசாலை, நல்லூர் கோயில் முன்புறம். (சி-6638)

### ஜோதிடன்

''ANPUGEE'' என்ற பெயரில் இயங்கிய சோதிட, (ஏனைய) நிலையம் JAFFNA FORT, J/81 இல், V. P கந்தசாமியின் இளையமகன் செல்வன் ''SHYANBUGEE'' ஆல் இயங்குகின்றது. (சி-6636)

### அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பு அரச வைத்திய சாலையில கடமையாற்றும் சிகிச்சையாளரால் மீண்டும் அக்குபங்சர் சிகிச்சையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நோயாளர்கள் பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும். மல்ற்றி மெடிக்கல் இல. 95, யாழ். வீதி, மானிப்பாய், திரு சத்தியமூர்த்தி கருவலடி வீதி, கொக்குவில் கிழக்கு. (சி-6639)

### A/L தூய, பிரயோக கணிதம்

தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதிகவியல் 20 வருட A/L வகுத்தாள்கள் உட்பட ஏராளமான பயிற்சிகளோடு தனிப்பட்ட பிரத்தியேக வகுப்பாக பல வருடம் அனுபவம்பெற்றஆசிரியரினால் மிகச்சிறப்பாகக் கற்பிக்கப்படும் தொடர்பு: R. பாலசுப்பிரமணியம B Sc (Cey) Dip. in Ed., 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (சி 6641)

---

### நீங்காத நினைவின் ஈராண்டில்



அன்னையின் நிழலில்:
**21-03 1978**

★

ஆண்டவன் கழலில்:
**07-08-1990**

## செல்வன் குயின்ரஸ் இராசநாயகம்

(பற்றிக்ஸ் மாணவன்)

''தாளாத் துயரை எமக்கீந்து
மீளாத் துயிலை நீ யேற்ற,
இறைபதம் தானடைந்த
ஈராண்டிலின்று - அஞ்சலித்தோம் கண்ணீரை.''

இரங்கற்பலி: புதுமடம் கர்த்தர் ஆலயம்
காலை 6 000 மணி.

பிரிவால் வாடும்:
சகோதரர், பெற்றோர்.

புதுமடம்,
உடுவில் தெற்கு,
மானிப்பாய். (சி-6632)

---

## விளையாட்டுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தென்மட்டுவில் கலைமகள் பாலர் கல்விக்கழகம் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி அண்மையில் அதிபர் செ. க. துரைரத்தினம் தலைமையில் கழக மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக சாவகச்சேரிநகரசபைவிசேட ஆணையாளர் திரு. த நவரத்தினராசா, சிறப்பு விருந்தினராக டாக்டர் பிலிப்ஸும் கௌரவ விருந்தினராக தமிழர் புனர்வாழ்வு கழக பொறுப்பாளர் திரு. திரவி திரு. செந்தூர்ச் செல்வம், அல்வயல் த. வி. பு. பிரதேச பொறுப்பாளர், செல்வி சுவைதா த. வி. பு. ம மு. அ. பொறுப்பாளர் கலந்து கொண்டனர் மத்தியஸ்தர்களாக அதிபர் சு. நடேசபிள்ளை, திரு. சந்திரமௌலீசன் திரு. எம். சரவணபவன் ஆசிரியர் திரு. சி சதாசிவம் மெய்யழகன ஆகியோர்கடமையாற்றினர்,

அருந்ததி இல்லம் 122புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும் வாசுகி இல்லம் 1.6 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் பெற்றன. (அ)

## கொமிஷியக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் 12ம் திகதிபுதன் கிழமை பி. ப. 3-00 மணிக்கு பொது நிலையினர் மண்டபத்தில் கொமிஸியக் கூட்டம் நடைபெறும். இக் கூட்டத்தில் யாழ் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை கலந்து கொள்வார். (அ)

## 15 வருடம் பாவிக்கும் சைக்கிள் ரயர்

(லண்டன்)

பிரிட்டிஷ் ரயர் உற்பத்தி நிறுவனமொன்று முதல் முகலில் பழுதடையாத சைக்கிள் ரயர் ஒன்றை உற்பத்தி செய்துள்ளது. இதற்கு ''கிறீன் ரியூப்'' என பெயரிடப்பட்டுள்ளது. இது பதினைந்து வருடங்கள பாவிக்கக்கூடியதாகவும் சுற்றுப்புற சூழலைப்பாதிக்காததாகவும் உள்ளது. (எஸ்)

## மோட்டார்சைக்கிள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

ஆனைக்கோட்டை உயரப்புலம பகுதியில் கடந்த 3-ம் திகதி இரவு க. சிவலிங்கம் என்பவரது எம் [illegible] 90 ரக மோட்டார் சைக்கிள் களவாடப்பட்டுள்ளது.

வீட்டு வாசலில் நின்ற போதே இரவு 11 மணியளவில் களவாடப்பட்டதாக தெரிவிக்கபபடுகிறது. [சி]

## சமய அறிவுப் போட்டி

[நல்லூர்]

நல்லூர் கந்தசுவாமிகோயில் வருடாந்த மகோற்சவத்தினையொட்டி யாழ்.மாநகரசபை பண்ணிசைப்போட்டி சமய அறிவுப்போட்டி, சமய அறிவு பேச்சுப்போட்டி ஆகியவற்றை நடாத்தவுள்ளது.

இப்போட்டிகள் அதிமேற்பிரிவு, மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளுக்கான முடிவுத்திகதி எதிர்வரும் 20-ம் திகதியாகும். விண்ணப்பப் படிவங்களை யாழ். மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. போட்டிகள் இம்மாதம் 22-ம் 23-ம், 24-ம், திகதிகளில் காலை 9-00 மணிக்கு நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறும். (158-154)

---

## 'பணி' வெளிவந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட 'பணி' என்னும் இதழ் வெளிவந்துள்ளது. (சு)

## யூனியன் கல்லூரி 175-ம் ஆண்டு நினைவு விழா

(கொழும்புத்துறை)

இலங்கையிலேயே மிகப் பழமையான யாழ் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி தன் 175-வது வருட நிறைவைக் கொண்டாடவுள்ளது

இக்கல்லூரியின் 175-வது வருட பூர்த்திவிழா நிகழ்வுகள் விரைவில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (154)

## நல்லூர் தெய்வீக இசை அரங்கு

**இன்றைய இசை நிகழ்ச்சி**

பாட்டு: வர்ண ராமேஸ்வரன், வயலின்: கோபிதாஸ், மிருதங்கம்: எஸ். துரைராஜா

## விறகு வியாபாரி விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினமிரவு சாவகச்சேரி பிரதான வீதியால் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த விறகு வியாபாரி மீது வாகனம் மோதியதில் படுகாயங்களுக்குள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

## முக்கிய அறிவித்தல்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைக்கு 03-08-1992ம் திகதி முதல் இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டுள்ளமையால் மேற்படி சங்கத்துடன் ஏதாவது கொடுக்குமதி வருமதியுள்ளவர்கள் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்
தலைவர்
(இடைக்காலம்)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (ஏ 2343)

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ். கிளையின் விசேட பொதுக்கூட்டமும் பிரிவுகளுக்கான வருடாந்தப் பொதுக் கூட்டமும் ஒத்தி வைக்கப்படுவதற்கான அறிவித்தல்

எதிர்வரும் 23-08-92 ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த யாழ். கிளை விசேட பொதுக்கூட்டமும், எதிர்வரும் 09-08-92ம் திகதி ஒவ்வொரு பிரிவிலும் நடைபெற இருந்த வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய செயற்குழுத் தேர்தல்கள் சம்பந்தமாக பல முறைப்பாடுகள் எமக்கு வந்துள்ளமையாலும், இம் முறைப்பாடுகள் பற்றி விசாரணை செய்து குறைபாடுகள் காணப்படின் அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டி இருப்பதாலும் மறு திகதி அறிவிக்கப்படும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் சகல அங்கத்தவர்களுக்கும் அறியத் தருகிறேன்.

தலைவர்
(இடைக்காலம்)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். ஏ 2344)

---

## நன்றி நவிலல்

### மிருதங்க அரங்கேற்ற வைபவம்
### செல்வன் தர்மராஜா திருக்குமார்

சென்ற 01-08-1992ல் நல்லை ஆதீனத்தில் இனிது நடைபெற்ற எமது புத்திரன் செல்வன் திருக்குமாரின் மிருதங்க அரங்கேற்ற வைபவ நிகழ்ச்சிகளை தலைமை தாங்கி நெறிப்படுத்திய வடக்கு-கிழக்கு மாகாண சபையின் யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளருக்கும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவுத் தலைவர், ஆகியோருக்கும், இவ் வைபவத்தினை மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைதது அணிசெய்த அன்னையர்க்கும் ஆசியுரைவழங்கிக் கௌரவித்த நல்லைஆதீன முதல்வர் மற்றும் பெரியோர்களுக்கும், மதிப்பீட்டுரை நிகழ்த்திய கலைஞர்களுக்கும் வைபவத்தில் திரளாகக் கலந்துகொண்டு ஆசிவழங்கியும் பல்வேறுவிதத்திலும் உதவிகள் புரிந்தும் கௌரவித்த பெரியோர்கள், கலைஞர்கள், ரசிகர்கள், அலுவலக நண்பர்கள் பாடசாலை நண்பர்கள் உறவினர்கள் அனைவருக்கும் எமது அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. திருமதி தர்மராஜா குடும்பத்தினர்.
வடலிபடைப்பு,
பண்டத்தரிப்பு. (ஏ 2345)

# ரொக்கெட் தொழில் நுட்பம் இந்தியாவுக்கு ரஷ்யா வழங்கும்

(புதுடில்லி)

ரொக்கட் தொழில்நுட்பம் வழங்குவது தொடர்பாக இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட சகல ஒப்பந்தங்களையும் நிறைவேற்றப்போவதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இரு நாடுகளின் நலன்குறித்தே இந்த ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப்பட்டன என்றும் இந்த இரு நாட்டு உறவுகளை பாதிக்கும்வகையில் வேறு எந்த நாடும் தலையிட அனுமதிக்கப்போவதில்லையென்றும் ரஷ்ய நாடாளுமன்ற சபாநாகர் நேற்று முன்தினம் புதுடில்லியில் செய்தியாளரிடையே பேசும்போது கூறினார்.

இந்தியாவுடனை உறவுகளுக்கு ரஷ்யா முன்னுரிமை அளிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார். (கே)

# தாயகம் திரும்பும் அகதிகளுக்கு வேலைவாய்ப்பு

(சென்னை)

தமிழகத்திலிருந்து வவுனியா திரும்பியிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கையில் பொதுநல ஸ்தாபனங்கள் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்திப்பிரிவு, சர்வதேச தொழில் ஸ்தாபனங்களின் உதவியுடன் இம்முயற்சிகளில் துரிதமாக ஈடுபட்டுவருவதாகவும் தொழில் நுட்ப உதவிகள் மற்றும் வங்கிக் கடன்களும் மேற்படி வவுனியா இளைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தென்னாபிரிக்க பகிஷ்கரிப்பு பெருவெற்றி பெற்றது!

(ஜோகன்ஸ்பேக்)

தென் ஆபிரிக்காவில் கறுப்பர்களுக்கு சுதந்திரம் வழங்குவதற்கான சட்ட திட்டங்களை விரைவில் கொண்டுவருமாறு கோரி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ்மற்றும் எதிர்க்கட்சிகள் நடாத்திய 2 நாள் பகிஷ்கரிப்பு போராட்டம் பூரண வெற்றியளித்துள்ளது:

கேப் டவுன் தவிர ஏனைய மா நிலங்களில் கடைகள், காரியாலயங்கள் எல்லாம் மூடப்பட்டன. தெருவெல்லாம் வெறிச்சோடிக் காணப்பட்டது. ஓடிய ரயில்களிலும் பஸ்களிலும் மக்கள் எவரும் காணப்படவில்லை.

இந்த இரண்டு நாள் பகிஷ்கரிப்பில் வன்செயல் எதுவும் நிகழாவண்ணம் கவனிப்பதற்காக ஐ. நா. அவதானிகள் கொண்ட குழு ஒன்று ஏற்கனவே தென் ஆபிரிக்கா வந்திருந்தது.

தற்போது காட்டப்பட்ட எதிர்ப்பு மக்கள் ஆதரவை பெற்றுள்ளதால் வெள்ளையர் சிறுபான்மை ஆட்சி விலக்கப்பட்டு ஒருவருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் நேர்தல் நடத்தப்பட்டு இன பாகுபாடு சட்டங்களும் அகற்றப்பட வேண்டுமென்பதை அது உலகுக்கு எடுத்துக் காட்டி விட்டது என்று தெரிவிக்கப் படுகிறது. (கே-இ)

# இலங்கை வீராங்கனைகள் ஒலிம்பிக்கில் சாதனை

(பர்சிலோனா)

பர்சிலோனாவில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக்போட்டியில் நேற்றுமுன்தினம் இலங்கை வீராங்கனைகளான நம்மிக மெனிக்கே, ஸ்ரீயானி சுயவன்சா ஆகியோர் இலங்கை சாதனையையும் சார்க் சாதனையையும் முறியடித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற 1,500 மீற்றர் தொடக்க நிலை ஓட்டப் போட்டியில் கம்மித மெனிகே 8-வது இடத்தைப்பெற்றுள்ளார்.

இத்தூரத்தை இவர் ஓடிமுடிக்க எடுத்த நேரம் 4 நிமிடம் 26.22 விநாடிகளாகும். இலங்கையின் சாதனை 4 நிமிடம் 33 விநாடிகளாகும். சார்க் சாதனை 4 நிமிடம் 48.86 விநாடிகளாகும்.

100 மீற்றர் தடைதாண்டும் போட்டியில் ஸ்ரீயானி 6-வது இடத்தைப் பெற்றுள்ளார். 13 55 விநாடிகளில் இவர் இத்தூரத்தை ஓடிமுடித்துள்ளார். இலங்கையின் சாதனை 13 9 விநாடிகளாகும். சார்க் சாதனை 14.21 விநாடிகளாகும். (க)

### தென்கொரியப் போட்டியில்

# போதைப் பொருள் பாவித்தாலும் ஸ்பெயினில் பதக்கம் பெற்றார்

(பர்சிலோனா)

தென் கொரியாவில் நான்கு வருடங்களுக்கு முன் நடந்த ஒலிம்பிக்போட்டியில் போதை பொருள் பாவித்தவர் என குற்றஞ்சாட்டப்பட்ட ஓட்டப்பந்தய வீரர் ஒருவர் பார்சிலோனா ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் பெற்றுள்ளார்.

கனடாவைச் சேர்ந்த மார்க் முக்கோயி கடந்த திங்களன்று ஆண்களுக்கான 110 மீற்றர் தடைதாண்டி ஓட்டப்போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்றெடுத்தார். (இ-கே)

# கட்டுரைப் போட்டி ஆயிரம் ரூபா பரிசு பெற்றார்

(புலோலி)

முதியோர் நல்வாழ்வு சர்வதேச தொண்டர் நிறுவனத்தின் இலங்கைக் கிளையினால் நடத்தப்பட்ட அகில இலங்கை ரீதியான கட்டுரை போட்டியில் பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரி மாணவி கனிமொழி கந்தரை வேற்பிள்ளை இரண்டாம் இடத்தைப் பெற்று 1000 ரூபா பரிசைப் பெற்றுக் கொண்டார். [61]

### ஒலிம்பிக் ஹொக்கி

# இறுதியாட்ட வாய்ப்பை பாகிஸ்தான் தவறவிட்டது

(பார்சிலோனா)

பார்சிலோனா ஒலிம்பிக் போட்டியின் ஹொக்கிச் சாம்பியன் மோதலில் பாகிஸ்தான் கலந்து கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டது.

பாகிஸ்தானுக்கும் ஜெர்மனிக்குமிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மிக விறுவிறுப்பான அரை இறுதிப் போட்டியில் ஜெர்மன்கோஷ்டி 2-1 கோல்கள் வித்தியாசத்தால் வெற்றிபெற்றது.

ஆட்டமுடிவில் இரு கோஷ்டிகளும் தலா ஒரு கோல்களைப் பெற்றிருந்தன. இதன் பின்பு வழங்கப்பட்ட மேலதிக நேரத்திலேயே ஜெர்மன் கோஷ்டி மேலும் ஒரு கோலைப்போட்டு வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது.

இதற்கு முன் நடைபெற்ற மற்றுமொரு அரைஇறுதியாட்டத்தில் அவுஸ்திரேலியா போலந்தை 3-2 என்ற கோல்கள் எண்ணிக்கையில் வெற்றி பெற்றது.

நாளை நடைபெறும் இறுதியாட்டத்தில், ஜெர்மனியை எதிர்த்து அவுஸ்திரேலியா மோதவுள்ளது. (வி)

# இன்று செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் விஞ்ஞான கணிதக் கழகம் நடாத்தும் ஆண்டு 11 மாணவர்களுக்கான இலத்திரனியல் செயலமர்வு வகுப்பு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு நடைபெறும்.

### வசதிக் கட்டண

# ஆசிரியர் நியமனங்களை புதுப்பிக்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பிரிவிலுள்ள பாடசாலைகளில் வசதிக் கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச்சங்க நிதியிலிருந்து படிகளை பெற்றுகல்வித்திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் நியமனம் பெற்ற ஆசிரியர்களுடைய நியமனங்களை புதுப்பிப்பதற்கு கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். வி. மகேசவேலு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இதுவரை தமது நியமனங்களை புதுப்பித்துக்கொள்ளாதிருக்கும் ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை பாடசாலை அதிபர்கள் உடனடியாகதமது அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டும் என்று பிரதிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார், (72-இ)

### ‘ப. நோ. கூ. சங்கங்களின்

# குறைபாடுகள் விரைவில் தீர்த்துவைக்கப்படும்’

[யாழ்ப்பாணம்]

யாழ். செயலகம் ப. நோ. உ. சங்கங்களுக்கு உணவு விநியோகம் செய்யும்போது போதுமான அளவு விநியோகம் செய்யவேண்டும் என்று ப. நோ. கூ. சங்க முகாமையாளர்கள் யாழ் அரச அதிபரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

ப. நோ. கூ. சங்க பொது முகாமையாளர் நேற்றுமுன்தினம் யாழ் செயலகத்தில் அரச அதிபர் கா. மாணிக்கவாசகரை சந்தித்து தமது குறைபாடுகளைத் தெரிவித்தார்கள்.

ப. நோ கூ. சங்கங்களின் குறைபாடுகள் மிக விரைவில் தீர்த்து வைக்கப்படுமென்றும், மாணவர் உணவுமுத்திரைக்கு ப. நோ கூ. சங்கங்கள் வழங்கியபொருட்களுக்குரிய பணத்தின் பெறுமதிக்கேற்ப உலர் உணவு வகைகள் சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு வழங்கப்படுமென்றும் அரச அதிபர் தெரிவித்தார். [வி-அ]

# இராசி பலன்

**07-08-1992**

**வெள்ளிக்கிழமை**

**(தமிழுக்கு ஆடி 23)**

நவமி மு. ப. 9-29 வரை; அனுபதம் ந. இ. 12-00 வரை. சித்தயோகம் இராகு காலம் காலை 10-34 வரை; சுபநேரம் காலை 6-04 முதல் 7-34 வரை வரலட்சுமி விரதம்.

மேடம்: அடுத்தவர் துன்பம், பணவிரயம், காரியத் தடை.

இடபம்: உறவினர் வருகை, தொழில் லாபம், மனநிறைவு

மிதுனம்: பெரியவர் உபகாரம், பணவரவு, குடும்ப சுகம்.

கடகம் கோபமிகுதி, தைரிய குறைவு, காரிய தடை,

சிங்கம்: தவறான முடிவு தொழில் நஷ்டம், அகால போஜனம்.

கன்னி இல்லற பகை, தனிமையடைதல், காரியதாமதம்

துலாம் பகைவரை வெல்லுதல், மனத்துயரம், சோம்பல்.

விருச்சிகம் நன்மையான சேதி, பயண அனுகூலம், தானதர்மம்.

தனுசு வழிப்பயம், ஏமாற்றம், வருமான பாதிப்பு

மகரம் கல்வியால் பெருமை. பிதா உதவி. இனிய செயல்.

கும்பம் புத்திரர் பெருமை, குடும்பபாசம், வெகுமதி.

மீனம் மனசஞ்சலம். வேண்டாத தொல்லை, அலைச்சல்.

— ஜோஸ்யர்

# பார்சிலோனா ஒலிம்பிக்கில் முன்னணி வகிக்கும் நாடுகள்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| இணைந்த சோவியத் | 35 | 29 | 20 |
| ஐக்கிய அமெரிக்கா | 21 | 29 | 24 |
| ஜெர்மனி | 17 | 16 | 23 |
| சீனா | 16 | 20 | 14 |
| ஹங்கேரி | 10 | 7 | 2 |
| ஸ்பெயின் | 10 | 1 | 10 |
| தென்கொரியா | 9 | 3 | 13 |
| பிரான்ஸ் | 7 | 5 | 13 |
| அவுஸ்திரேலியா | 6 | 8 | 9 |
| கனடா | 6 | 1 | 6 |
| ருமேனியா | 4 | 4 | 6 |
| இத்தாலி | 4 | 5 | 8 |
| பிரிட்டன் | 4 | 3 | 5 |
| கியூபா | 4 | 2 | 7 |
| யப்பான் | 3 | 7 | 7 |
| போலந்து | 3 | 4 | 6 |
| செக்கோசிலவாக்கியா | 2 | 2 | 1 |
| துருக்கி | 2 | 1 | 1 |
| நோர்வே | 2 | 2 | — |

# நித்தம் நிமிரும் நிலம்

வேல்வந்து பாய்ந்து மயில்வந்து கூத்தாடி
மேல்வந்து சேவல் சிறகடிக்க — நல்லூரான்
எத்தர் படையழிப்பான் எங்கள் புகழோங்கி
நித்தம் நிமிரும் நிலம்.

—அமுதன்

(★இன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் 5ம் திருவிழா)

# 2,300 அடையாள அட்டைகள் குமணவில் வந்தன

(யாழ்ப்பாணம்)

சுமார் 2 300 தேசிய அடையாள அட்டைகள் நேற்று முன்தினம் வந்த 'குமண' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டு யாழ். அரச செயலக ஆட்பதிவுப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவற்றுள் தொலைந்து போன அடையாள அட்டைகளுக்கான இணைப்பிரதி அட்டைகள் 434ம், அவசர விண்ணப்பங்களுக்கான அடையாள அடையாள அட்டைகள் 296ம், குடாநாட்டின் பாடசாலை மாணவர்களுக்குரிய அட்டைகள் 428ம் சாதாரண விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகள் 1,142ம் அடங்கும்.

தொலைந்த அடையாள அட்டைகளுக்கான இணைப் பிரதிகள், மற்றும் அவசர அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான சுய முகவரியிடப்பட்ட கடிதஉறைகள் யாவும் உடனடி விநியோகத்திற்காக யாழ். பிரதான அஞ்சல் அலுவலகத்தில் சேர்க்கப்பட்டும், சாதாரண விண்ணப்பங்களுக்கான அடையாள அட்டைகளை நேரில் பெற்றுக்கொள்வதற்காக யாழ். அரச செயலகத்துக்கு யாரும் வருகை தர வேண்டாமென்றும், செயலகத்தில் அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படமாட்டாதென்றும் ஆட்பதிவுத் திணைக்கள நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (161)

# முஸ்லிம் காங்கிரஸ் தமிழ் கட்சிகள் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ் கட்சிகளுக்கும் முஸ்லிம் காங்கிரஸிற்குமிடையிலான அடுத்த கட்ட சந்திப்பு நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இணைந்த வடக்கு-கிழக்கு மாகாணசபையின் கீழ் உருவாக்கப்படும் முஸ்லிம் கவுன்ஸிலுக்கு வழங்கப்படடும் அதிகாரங்கள் மற்றும் முஸ்லிம் கவுன்ஸிலுக்கு வெளியே உள்ள முஸ்லிம்களின் பாதுகாப்பு குறித்தும் இச்சந்திப்பில் பேச்சுக்கள் நடைபெறுமாம்.

இப்பாதுகாப்பு அம்சங்கள் எந்தெந்த அடிப்படையில் உறுதிப்படுத்தப்படும் என்பது பற்றி தமிழ் கட்சிகள் ஏற்கனவே எழுத்துமூலம் முஸ்லிம் காங்கிரஸிடம் கையளித்துள்ளனவாம். (சி)

# உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்படட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று இன்று நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குருநகர் பாடும்மீன் அணியும், பாசையூர் சென். அன்ரனிஸ் அணியும் இப்போட்டியில் மோதவிருந்தன. (சி)

# ஓய்வூதியக் கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

ஆவணி மாதத்துக்குரிய சிவில் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இலங்கை வங்கி ஊர்காவற்றுறைக் கிளையில்வாடிக்கையாளருக்கு இன்று பணமாக வழங்கப்படும். ஆடி மாதத்துக்குரிய புகையிரத உள்ளூராட்சி ஓய்வூதியக்கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

0 0 0

[மானிப்பாய்]

ஆவணி மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் நேற்று 6ம் திகதி வியாழன் யாழ். செயலகத்திலிருந்துஉரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (71)

★ க. பொ. த. (உ|த) பரீட்சை

# மிகுதி விைடத்தாள்கள் பலாலி வந்தன

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. (உயர்தர) 1992க்குரிய பரீட்சையின் இரண்டாம் தொகுதி விடைத் தாள்கள் நேற்று விமான மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டுள்ளது என்று யாழ். கல்விப்பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

பலாலியிலிருந்து கப்பல் ... சரணையுடன் இன்று மாலை கல்வித்திணைக்களத்திற்கு வந்துசேருமெனஎதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை இடையே 5ம் ஆண்டுபுலமைப் பரிசில் பரீட்சை விடைதாள்களும், ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்குரிய விடைத்தாள்களும் இன்று வந்து சேரலாம் என்று யாழ். கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (சு

# இன்று

(நல்லூர்)

நல்லூர் ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சகல உணவகங்கள், தேனீர்ச் சாலைகள், ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பான சாலைகள், பால்சாலை, முட்டாஸ் விற்பனை நிலையங்கள், ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கான கருத்தரங்கு இன்று மு. ப. 11 மணிக்கு நல்லூர் மேற்கு வீதியில் அமைந்துள்ள மங்கயர்க்கரசி வித்தியாலயத்தில் நடாத்தப்படும் (158)

...டுப்படுத்தப்படும். ...னும திகதியை 08-08-92 ற்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [சி-6623]

வன் "SHYANBUGEE" ஆல் இயங்குகின்றது. (சி-6636)

அக்குபங்சர் சிகிச்சை

கொழும்பு அரச வைத்தியசாலையில கடமையாற்றும் சிகிச்சையாளரால் மீண்டும் அக்குபங்சர் சிகிச்சையானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நோயாளர்கள் பின்வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும். மல்ற்றி மெடிக்கல் இல. 95, யாழ். வீதி, மானிப்பாய், திரு சத்தியமூர்த்தி கருவலடி வீதி, கொக்குவில் கிழக்கு. (சி-6639)

நொத்தாரிஸ்களுக்கு

முதல்தர லெஜரிலான ஈடுவகை Blank உறுதிகள் - மாணவர்க்கான அறிவுக்களஞ்சியம் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனையாகின்றன. சுழிவுண்டு துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ், சுன்னாகம். (எ-2341)

வாங்கலாம் விற்கலாம்

பாவித்த தரமான கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள்

A/L

தூய, பிரயோக கணிதம்

# யாழ். செயலகம் மின்னொளி மயமாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகப் பகுதிகள் ...னைத்தும் விரைவில் மின் ... பெறவிருக்கிறது.

இதுவரை யாழ். செயலகத் ... அத்தியாவசியப் பகுதிகளான 'பிறப்பு - இறப்புப் பதிவாளர் பகுதி ஓய்வூதியப்பகுதி, அரசாங்க அதிபர் பகுதி ஆகிய மூன்று பகுதிகளுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம் ஜெனரேட்டர் மூலம் வழங்கப்பட்டுவந்தது.

இனிமேல் கொழும்பிலிருந்து விரைவில் வரவிருக்கும் இரண்டு ஜெனரேட்டர்கள் மூலம் யாழ். செயலகத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் தொடர்ச்சியான மின் சாரம்வழங்கப்படவிருக்கிறது.

... யாழ். செயலக பகுதிகள் அனைத்துக்கும் மின் சார திருத்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (வி)

# ...கோவிலுக்கு வழங்க அரசு சம்மதம்

(யாழ்ப்பாணம்)

விமானக் குண்டு வீச்சினால் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு எழுதிய கடிதத்தில் துர்க்கை அம்மன் கோவிலுக்கு ஏற்பட்ட நஷ்டத்தின் விபரங்களை விபரமாக உடனடியாக அனுப்பும்படியும் ஜனாதிபதியின் நிதியிலிருந்து இதற்கான பணத்தை ஒதுக்கீடு செய்யவிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விமானக்குண்டுவீச்சினால் 39 லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று கோவில் நிர்வாகிகளால் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்று முன்னர் அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## இன்று

(யாழ்ப்பாணம்)

...டமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று காலை 11-00 மணிக்கு இல. 3, சம்பியன் வீதியில உள்ள சங்கக் காரியாலயத்தில் நடைபெறும்.

# கொழும்பு செல்லும் நோயாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்சாக வைத்திய நிபுணர்களினால் சிபார்சு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் இன்று யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

முன்னர் தெரிவுசெய்யப்பட்ட சடுமையாகப் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் எதிர்வரும் 14ம் திகதி புறப்படும் குமண கப்பலில் புறப்பட்டுச் செல்வர்என்றும் இன்று பதிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் நோயாளர்கள் 16ம் திகதி கொழும்பு நோக்கி புறப்படும் மற்றொரு கப்பலில் ஏற்றிச் செல்லப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று தெரிவு செய்வதற்காக வரும் நோயாளர்கள் அடையாள அட்டை, நோய்க்கூற்று வைத்திய பத்திரம் போன்றவற்றை தம்முடன் எடுத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (56)

## வீரச்சாவு

(மட்டுநகர்)

மட்டு. மாவட்டத்திலுள்ள அம்பிலாந்துறையில் கடந்த 3-ந் திகதி இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலொன்றில் வீரவேங்கை சிவதர்ஷன் அல்லது மதிகரன் (கற்பூரப் போடி கோபாலபிள்ளை குருக்கள்மடம்) சயினட் அருந்தி வீரச்சாவு அடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## யாழ். குடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு எதிராக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று எடுக்கப்படவேண்டுமென படையினர் உணர்ந்துள்ளனராம்.

மேற்படி இராணுவ நடவடிக்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நடாத்தப்படுமெனவும் இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## பலாலி ஷெல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளனர்.

காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளோரில் செல்வி சிவரஞ்சனி சிவலிங்கம் [10-வயது, மல்லாகம்) ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

காயமடைந்தோர் விபரம்:- கோட்டைக்காடு மல்லாகத்தைச் சேர்ந்தவர்களான மகேந்திரன் ஐங்கரன் [வயது 10], இரத்தினசிங்கம் ராஜ்குமார் (வயது 10), வரதராசா ஜெகதா (வயது 10), நிசாந்தி உதயமனோகரன் (வயது 10) பரணிதரன் கருணாநிதி (வயது 10), குணலிங்கம் குணதீபன் (வயது 10), திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா (73 வயது) மயிலங்காடு சுன்னாகம் ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (56-ரி-சி)

## ஒலிம்பிக்

செய்யவேண்டுமென இந்திய பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் குரல் எழுப்பியுள்ளன.

இந்திய விளையாட்டுச் சிறப்பு பார்ஸிலோனா ஒலிம்பிக்கில் இறந்துவிட்டதாக அதற்கான ஒருநிமிட இரங்கல் மௌன அஞ்சலியை சில உறுப்பினர்கள் நாடாளுமன்றில் தெரிவித்தனர்.

தான் ராஜினாமாச் செய்வதால் இந்தியாவிற்கு ஒலிம்பிக் பதக்கம் கிடைக்குமென்றால் அதற்காகத் தான் ராஜினாமாச் செய்யத் தயார் என்றும் அமைச்சர் கூறினார். (சி)

## யுத்தகாலத்திற்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டை மீட்டெடுக்கும் போரை தொடங்குவதற்கு முன்னோடியாக பலாலியில் இந்த யுத்தகால சிவில் நிர்வாக அமைப்பு உருவாக்கப்படவுள்ளதாம்.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும்போது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலிருந்து ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை யுத்தநடவடிக்கைமேற்கொள்ளப்படாத இடங்களுக்கு செல்லுமாறு இராணுவம் அறிவிக்குமெனவும் இதன் மூலம் இடம்பெயரும் மக்கள் தொடர்பான விவகாரங்களை மேற்கொள்ளவே இந்த அமைப்பு எனவும் இதற்கான ஏற்பாடுகள் பாதுகாப்பு அமைச்சின் உயர்மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## போர் நடக்கும்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது.

எந்த யுத்தத்தால் பாதிக்சப்பட்டு அதிலிருந்து தப்ப இந்தியாவிற்கு அகதிகளாக மக்கள் வந்தார்களோ அதே யுத்தப் பகுதிக்குத் தற்போது இவர்கள் அனுப்பப்படுவது கவலைக்குரிய விடயமே என பி. பி. ஸி, தெரிவித்தது.

வெளியேற விரும்பாத மக்கள் தொடர்ந்தும் இந்தியாவில் அகதி முகாமகளில் அடைக்கப்படுவர் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளதாம். [சி]

## அரசு-தொண்டா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று குற்றம்சாட்டினார்.

இந்தியாவுக்கு திருப்பி அனுப்பப்படவேண்டிய பல லட்சக்கணக்கான தமிழர்களை திருப்பி அனுப்பாது அவர்களை இலங்கைப் பிரஜைகளாக்கவே இப்பேச்சுக்கள் நடைபெற்றுள்ளதாகவும் கூறினார்.

இதனை மறுத்த பிரதமர் திரு. விஜயதுங்கா, தினேஷ் குணவர்த்தனவின் கூற்றில் உண்மை இல்லை என்றும் கூறினார். (சி)

## போர் உத்திகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திசைதிருப்ப புலிகள் கிழக்கில் அதிரடி, கெரிலாத் தாக்குதல்களை தொடர்ச்சியாக நடத்திவருவதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் தயா விஜயசேகரா தெரிவித்தார்.

தொடர்ச்சியான தாக்குதல்களினால் இராணுவத்திற்கு பாரிய அளவில் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை இராணுவ பேச்சாளர் ஒத்துக்கொண்டுள்ளார்.

மீண்டும் கிழக்கில் பலம் பொருந்திய நிலையில் இராணுவத்தை வைத்திருப்பதற்கான முயற்சிகள் தற்போது எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இராணுவம் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி வெளியே தெரிவிக்க இயலாது என்றும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் ரோந்து அணிகளையும், மேலதிக காவலரண்கள் அமைக்கும் பணிகளுக்கும் இராணுவம் தற்போது ஈடுபடுத்தப்பட்டுள்ளதாவும் அவர் தெரிவித்தார். (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 66ம்இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/8